பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 46

சனிக்கிழமை
11 ஜனவரி 2025

மார்கழி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

பெரும்போக செய்கைக்கு மானிய உரம் » 06

## சி.ஐ.டி.யினர் எனக்கூறி ரூ.53,700 கொள்ளை

யாழ்., ஜன. 11
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தம்மைக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் என்று போலியாக அடையாளப் படுத்தியவர்கள் ☞ 11

# பொதுச்சபையைக் கூட்டினாலேயே தமிழரசைக் காப்பாற்ற முடியும்!

## இல்லையேல் மாபியாக்களிடம் கட்சி போய்விடும் சிவமோகன் நேற்றுக் கடும் காட்டம்



முல்லைத்தீவு, ஜனவரி 11
தமிழரசுக்கட்சி காப்பாற்றப்பட வேண்டுமாயின், பொதுச்சபை உடனடியாகக் கூட்டப்பட வேண்டும். இல்லையேல் மாபியாக்களின் ஆதிக்கம்தான் கட்சிக்குள் அதிகரிக்கும் என்று தமிழரசுக்கட்சியின் மத்திய குழுவினருக்கு நாடாளுமன்றமுன்னாள் உறுப்பினரான சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். ☞ 10

## சிறீதரன் எம்.பிக்கு பயணத்தடையா?

### விமான நிலையத்தில் கடும் விசாரணைகள்

கொழும்பு, ஜன. 11
நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்குப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதக் குற்றத்தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரிடம் அவரை ஒப்படைக்குமாறு தமக்கு பணிக்கப்பட்டுள்ளது ☞ 11

## இலங்கையின் இரக்கமே ரொஹிங்யர்களுக்குத் தேவை

ஐ.நா. சபை தெரிவிப்பு » 11



## தமிழாராய்ச்சிப் படுகொலைகள்: தமிழர் தாயகத்தில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜன. 11
1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு, படுகொலைகளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியிலும் தாயகத்தின் இதர பகுதிகளிலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.
தமிழாராய்ச்சிப் படுகொலைகளின் நினைவாக அமைக்கப்பட்டு நினைவுத் ☞ 11

### வடமாகாண

## வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஜனவரி 15 முதல் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஜன. 11
வடமாகாணத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு ஜனவரி மாதம் 15ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. ☞ 10

## விபத்தில் முதியவர் இறப்பு!

கிளிநொச்சி, ஜன. 11
கிளிநொச்சிகந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தில் ☞ 11

### ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர்

## உதயங்க வீரதுங்க நேற்றுக் கைது!



கொழும்பு, ஜன. 11
ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க, நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அயல்வீட்டில் வசிக்கும் ☞ 11



'மனல் மாபியா, மருத்துவமாபியா வரிசையில இப்ப அரசியல் மாபியாக்களுக்கும் இஞ்ச குறைவில்லை போல'

## அநுர அரசாங்கம் பதற்றமடைகிறது!

### முன்னாள் எம்.பி. சரித விளாசல்

கொழும்பு, ஜன. 11
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது பதற்றமடைய ஆரம்பித்திருக்கின்றது. ஊடகங்களை அவர்கள் கையாளும் விதத்தில் இது தெளிவாகின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார். ☞ 11

## ஈஸ்டர் தாக்குதல்களுடன் எனக்குத் தொடர்பில்லை!

### சத்தியம் செய்கின்றார் பிள்ளையான்

கொழும்பு, ஜன. 11
உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.
களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்காக நேற்று முன்னிலையான பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே பலம் நிரூபிக்கவேண்டும்

## சித்தார்த்தன் எம்.பி. சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஜன.11**

**தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒற்றுமையாகப் பலத்தைக் காட்டினால் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வை இலகுவில் எட்டமுடியும் என்று புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுதினத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ்த் தேசத்தின் அடையாளமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் மாவட்டத்திலே தமிழ்த் தேசியமானது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மறுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் அனைத்துத் தரப்புகளும் ஓரணியாக சாத்வீக தமிழ்த்தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டு தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்த வேண்டும்.

வடக்கு- கிழக்கை இன்று எடுத்துப் பார்க்கின்றபோது கிழக்கு மாகாணத்திலேயே தேசியத்தின் பக்கம் மக்கள் நின்றுள்ளார்கள். வடக்கிலே தமிழ்த் தேசியம் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டு சிங்களத் தேசியக் கட்சிக்கே மக்கள் வாக்களித்துள்ளனர். இதனையுணர்ந்து அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஒற்றுமையாகச் செயற்படுவதனூடாகவே தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றமுடியும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்- என்றார்.

இதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவு தினம் இருவேறு கட்சிகளால் ஒரே நினைவுத் தூபியடியில் தனித் தனியாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

# உட்பூசல்கள் நிலவினாலும் இலக்கிலிருந்து விடுபடலாகாது

## சீ.வி.கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ் மக்களின் நலன்கருதி எங்களுக்குள் என்ன பிரச்சினைகள் நிலவினாலும் எம்முடைய தலைமைத்துவத்தை ஆளுந்தரப்பிடம் தாரைவார்க்கக்கூடாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெற்கின் இனவாத சக்திகளின் செயற்பாடு தமிழர்கள் மீது தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நாங்கள் திசைமாறி பயணிக்கும் சூழல் எம் மத்தியில் எழுகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தென்பகுதி தலைமைகளை எங்களுடைய மக்கள் தெரிவு செய்துள்ளார்கள்.

எம்மிடத்தில் என்ன பிரச்சினை இருந்தாலும் தலைமைத்துவம் எம்மிடம் இருக்கவேண்டும். உள்ளூராட்சித் தேர்தலின்போது பொதுமக்கள் கடந்த காலங்களைப் போல் இல்லாது விழிப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (ச-125)

# இனவன்முறையை தூண்டினால் சிறை

கொழும்பு, ஜன.11

இலங்கையில் இனிமேல் இன, மத அவமதிப்புகளுக்கும் வன்முறைகளுக்கும் இடமேயில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இன, மத வன்முறைகளை மீண்டும் தூண்ட முயல்வோர் சிறைகளில் அடைக்கப்படுவார்கள்.

எவராக இருந்தாலும் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## கடந்த 10 ஆண்டுகளில்

# ஒரு இலட்சம் வரை பிறப்புவீதம் சரிவு


கொழும்பு, ஜன. 11

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பிறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளதாகவும் இந்த நிலைமை இந்த நாட்டின் எதிர்காலத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் குழந்தை மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 50 ஆயிரமாக இருந்த பிறப்புகள் 2024 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 28 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

அந்தக் குழந்தைகளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் நோய் காரணமாக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர். குழந்தைப்பருவ நீரிழிவு, குழந்தைப் பருவப் புற்றுநோய் என்பன அதிகரித்துள்ளன.

எனவே அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்படவில்லையாயின் நாம் அனைவரும் கடினமான சூழ்நிலையை எதிர்நோக்கநேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



# பொங்கலுக்கு அரிசியில்லை வர்த்தகர்கள் போராட்டம்

கொழும்பு, ஜன. 11

அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி அக்கரப்பத்தனை நகரில் வர்த்தகர்கள் நேற்றுக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நாட்டில் தைப்பொங்கல் வருகின்றது. இதற்குப் பொங்கல் பொங்குவதற்கு சிவப்பு அரிசி உள்ளிட்ட அரிசி வகைகள் தேவைப்படுகின்றன. எனினும், அரிசித் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ச-இ)

**சுபிரி தன சம்பத** DLB
திகதி: 10.01.2025 | தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: U | வெற்றி வாரம்: 0420
வெற்றி இலக்கம்: 0, 7, 9, 5, 4, 4 | செக்கண்ட சான்ஸ் இலக்கம்: -
அடுத்த சுப்பர் ஜக்பொட்:

**Super Ball** DLB
திகதி: 10.01.2025 | தினம்: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2686 | ஆங்கில எழுத்து: H | வெற்றி இலக்கம்: 22, 43, 68, 75
அடுத்த சுப்பர் ஜக்பொட்: -

**சனிதா** DLB
திகதி: 10.01.2025 | தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: X | வெற்றி இலக்கம்: 34, 49, 60, 67 | வெற்றி வாரம்: 4847
செக்கண்ட சான்ஸ் விஷேட இலக்கம் 100,000/- பணப் பரிசு: 88941

**SASIRI** DLB
திகதி: 10.01.2025 | தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 0597 | வெற்றி இலக்கம்: 05, 43, 48

**லக்ன ராசி** DLB
திகதி: 10.01.2025 | தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கம்: 08, 49, 57, 62 | சீட்டிழுப்பு வாரம்: 4398 | அடுத்த சுப்பர் ஜக்பொட்:
மேசம் | விசேட இலக்கத்துக்கான பரிசு: 266017

**KAPRUKA** DLB
திகதி: 10.01.2025 | தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: U | வெற்றி இலக்கம்: 07, 15, 27, 69 | அடுத்த சுப்பர் ஜக்பொட்:
வெற்றி வாரம்: 1862

**அத கோடிபதி** DLB
திகதி: 10.01.2025 | தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: X | வெற்றி இலக்கம்: 16, 56, 57, 63 | வெற்றி வாரம்: 2512
அடுத்த சுப்பர்ஜக்பொட்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலை ஒழிப்பதற்கு விசேட ஏற்பாடு தேவை

## ரஜீவன் எம்.பி. சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜன.11**

**நாட்டில் ஊழலை ஒழிப்பதற்கு விசேட ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான 2025 - 2029 தேசிய ஊழல் எதிர்ப்புச் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்ட செயலமர்வு நேற்று இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். பொலிஸ் நிலையங்கள் அரச திணைக்கள மட்டத்தில் செய்யப்படும் இலஞ்ச, ஊழல் தொடர்பான முறைப்பாடுகளைச் சரியான முறையில் விசாரணை செய்கின்றனவா என்பதைக் கண்காணிக்க விசேட குழுக்கள் இல்லை. புகார் அளித்தவர்கள் பழிவாங்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் போதிய ஆளணி இல்லை. இத்தகைய குறைபாடுகள் உள்ள நிலையில் ஊழலை ஒழிக்கமுடியாது. எனவே, அவற்றைச் சீர்செய்து இலங்கை முழுவதும் ஊழலை ஒழிக்க விசேட ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார். (ச-26)

# 4 கி.மீற்றர் தூரம் சென்று திருடனைப் பிடித்த நாய்

கொழும்பு, ஜன. 11

வாரியப்பொலப் பகுதியில் மோப்பநாயொன்று 4 கிலோமீற்றர் தூரம்வரை பயணித்து பற்றரித் திருடனைக் கண்டறிந்து இனங்காட்டியுள்ளது. வாரியப்பொல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குச் சான்றுப் பொருள்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களில் பற்றரிகள் களவுபோயின. திருட்டுச் சம்பவம் தொடர்பில் தடயங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் குருநாகல் பொலிஸ் பிரிவிலுள்ள பயிற்சிபெற்ற மோப்பநாயை பொலிஸார் வரவழைத்து தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தினர். மோப்பநாய் வாரியபொல ஊடாகக்கிட்டத்தட்ட நான்கு கிலோ மீற்றர் தூரம் பயணித்து அங்கிருந்த வீடொன்றுக்குள் சென்றுள்ளது. அங்கு ஐந்து பற்றரிகளுடன் கையும் களவுமாக சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-22,6)

# கோப் குழுவின் தலைவராக நிரந்த சமரவீர

கொழும்பு, ஜன.11

பொது நிறுவனங்கள் பற்றிய குழுவான கோப் குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் நிஷாந்த சமரவீர தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பொது நிறுவனங்கள் பற்றிய குழு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

# சம்பிக்கவின் பயணத்தடை நீக்கம்

2016ஆம் ஆண்டு, இராஜகிரியப் பிரதேசத்தில், வாகனவிபத்தை ஏற்படுத்தினாரென குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையை தற்காலிகமாக நீக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)

# இலங்கைக் கபடி அணியில் உடுவில் கல்லூரி மாணவி

யாழ்ப்பாணம், ஜன.11



இலங்கைக் கபடி அணியில் உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தின் மாணவியுமான பியங்கா இடம்பிடித்துள்ளார். இந்த அணி எதிர்வரும் நாள்களில் போட்டியில் பங்கேற்க இந்தியா புறப்படவுள்ளது. (ச-125)

# பௌர்ணமி நாள் நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஜன. 11*

*சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் 'வல்லமை அமைப்பின் அரசியல் மாற்றமும் அத்தியாவசிய உணவுப்பொருள் அரசியலும்' எனும் தலைப்பில் பௌர்ணமி நாள் கலந்துரையாடல் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-22,159)*





**வலியப் போய் வொல்லைக் குடுத்து அடிவாங்கிறதுக் கெண்டே சிலபேர் இருக்கினம். அப்பிடி பட்சியிட்டையும் ஒராள் மாட்டுப்பட்டதை எங்கை போய்ச் சொல்லிச் சிரிக்கிறதெண்டு தெரியாமல் கிடக்கு. போனமாசம் 16 ஆம் திகதி பட்சியில பீற்றூட் கதையொண்டு சொன்னது உங்களுக்கு நினைவிருக்கும். வெள்ளத்தால நூற்றுக்கணக்கான ஏக்கர் பீற்றூட் அழிஞ்சதெண்டு விவசாயத் திணைக்களக்காரர் பருமட்டாக் குடுத்த அறிக்கையை வெள்ள அழிவு சம்பந்தமான கூட்டத்தில எல்லாரும் கண்டபடி கிழிச்சுத் தொங்கவிட்டவை எண்டு பட்சி சொல்லியிருந்தது. உண்மையில அந்தப் பிழையான பிரசண்டேசனைச் செய்த, தன்னைத்தான் பட்சி தாக்கிப்போட்டுதெண்டு யாழ்ப்பாணம் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஒரு மறுப்புக்கடிதம் அனுப்பியிருந்தவா.**

**ஆனால் பகிடி என்னெண்டால் அந்த மறுப்புக்கடிதத்திலேயே பெரிய ஓட்டை இருக்கிறதுதான். இந்தக் கடிதத்தில அவா 'பீற்றூட்டை அழிவைப் பற்றி நான் சொல்லேலை, பீற்றூட் பயிர்ச்செய்கையின்ர அளவு 46.25 ஏக்கர் எண்டுதான் தான் பிரசண்டேசனில சொன்னன்' எண்டு சாரப்படத்தான் எழுதியிருக்கிறா. ஆனால் பிரசண்டேசனில 108.9 ஏக்கர் பீற்றூட் அழிஞ்சதெண்டுதான் அட்டவணை போட்டுக் காட்டியிருக்கினம். அந்த 'சிலைட்டின்ர' படம் கூட பட்சியிட்ட இருக்கு. சரி, எதுக்கும் இதைப்பற்றி ஒருக்கா யாழ்ப்பாணம் கச்சேரிக்காரிட்டத் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில கேள்வி கேட்டால், அதிலையும் அண்டைக்கு 108.9 ஏக்கரில தான்பீற்றூட் செய்கை அழிஞ்சு போச்செண்டு சொன்னம் எண்டு அடிச்சுச் சொல்லுகினம். அப்பிடியெண்டால் 46 சொச்சம் ஏக்கரில நட்ட பீற்றூட் எப்பிடி நூறு ஏக்கரைத் தாண்டி அழியும்? சிலவேளை பீற்றூட் செய்தால், தன்ரபாட்டில காணி ரண்டு மூண்டு மடங்கு பெரிசாகுமோ? அதாலதான் பீற்றூட் நட்ட அளவை விட அழிஞ்ச அளவு கூடவா இருக்குப் போல.**

**அதைவிட அண்டையான் கூட்டத்தில பிரதி விவசாயப்பணிப்பாளர், அழிவைப்பற்றிக் கதைக்கேலை, பீற்றூட் உற்பத்தியை மட்டுந்தான் கதைச்சவா எண்டும் கச்சேரிக்காரர் தகவல் அறியும் சட்டத்தில கேட்ட கேள்வியில உறுதிப்படுத்தி இருக்கினம். இப்ப பட்சி அண்டைக்கே சொன்னமாதிரி இவையள் எல்லாம் களத்துக்குப் போகாமல் ஏசி அறைக்குள்ள இருந்தபடி உந்த அழிவு விவரங்களை எடுத்திருக்கினம் எண்டது இன்னும் உறுதியாகிட்டுது எல்லோ. இல்லாட்டி எப்பிடி தான் பிரசண்டேசன் செய்த ஏக்கரின்ர அளவைத் தெரியாமல் இப்பிடி மாத்தி மாத்தி ஒரு பொறுப்பான ஒபீசர் சொல்லுவா? அதுவும் மறுப்பறிக்கை விடேக்க, பொறுப்பா ஆதாரத்தோட எல்லோ எழுதோணும். அழிவு விவரம் திரட்டின பழக்கதோசத்தில, கண்ணை மூடிக்கொண்டு பட்சிக்கும் மறுப்பு விட்டால் இப்பிடித்தான் உண்மையள் வெளிப்பட்டு, தலைகுனியவேண்டியிருக்கும் கண்டியளோ.**

இதுதான் அந்த மறுப்புக் கடிதம்



padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிற்பகலுக்கு மேல் தொடங்கும் புதிய முயற்சி அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது. அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**இடபம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.. பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டுவருவார்கள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையக்கூடும். கணவன் மனைவிக் கிடையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டு உடனே சரியாகிவிடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறு சிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றச் சற்று அலைய வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணை உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் சற்று இழுபறிக்குப் பிறகு கிடைத்துவிடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக் கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** . கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

# அக்கரைவெளி இணைப்பு வீதி புனரமைப்பதற்கு நடவடிக்கை

முல்லைத்தீவு, ஜன.11

முல்லைத்தீவு - கொக்குளாய்ப் பிரதேசத்தின் தென்னைமரபடி அக்கரைவெளி இணைப்பு வீதியைப் புனரமைப்புக் குறித்து பார்வையிடுவதற்கான களப்பயணம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் மாவட்டச் செயலகப் பிரதிநிதிகள், யு.என்கபிரற் பிரதிநிதிகள், வனவளத் திணைக்களப் பிரதிநிதிகள், கமநலசேவைத் திணைக்களப் பிரதிநிதிகள், விவசாயப் போதனாசிரியர், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

அதேவேளை சுற்றாடல் அமைச்சின் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் 'காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை மாறுபாட்டைத் தாங்கும் தன்மை' எனும் தலைப்பில் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-45-20)

# பாடசாலை மாணவன் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஜன.11

வெல்லவாயப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெதகலகமப் பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளாரென வெல்லவாயப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15 வயதுடைய மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தலைமுடியை வெட்டுவதற்குத் தாயாருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே மாணவன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளாரெனக் கூறப்படுகிறது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாயப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ச-இ)

# தேசிய தைப்பொங்கல் விழா யாழ்ப்பாணத்தில் சனியன்று

யாழ்ப்பாணம், ஜன.11

தேசிய தைப்பொங்கல் விழா தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சனில் செனவி தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. சமய வழிபாடுகளைத் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வரை ஆன்மீக விழிப்புணர்வு நடைபயணமும், கலாசார நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. தேசிய தைப்பொங்கல் பண்டிகை இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-45,125, 9,159)

# நூல் அறிமுகம்

சிட்னி, ஜன. 11

அவுஸ்திரேலியா சிட்னி தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் ராணி சீதரனின் 'சிறுவர்களுக்கான சிலப்பதிகாரம்' எனும் நூல் அறிமுக விழா ஜார்ஜ் டூங்காபி கொமியூனிட்டி சென்றர் மெபாம் ஹோலில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. எழுத்தாளர் மாத்தளை சோமு தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கம்பர்லேண்ட் கவுன்சிலர் சுஜன் செல்வேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

'சிறுவர்களுக்கான சிலப்பதிகாரம்' நூலை இசைப் பேராசிரியர் அரிமளம் பத்மநாதன் கடந்த வருடம் செப்டெம்பர் மாதத்தில் வெளியிட்டு வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-25)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 01 . 1939



மறைவு
10 . 01 . 2025

## திருமதி பரமசிவம் நீலாயதாட்க்ஷி

பதுளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கன்னாத்திட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிவம் நீலாயதாட்க்ஷி அவர்கள் நேற்று (10.01.2025) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையாபத்தர்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குப்புசாமிபக்தர்-கமலம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பரமசிவத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமசிவம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற இந்திராணிமற்றும் மாரியாயி ஆகியோரின் மைத்துனியும் கருணாகரன், கமலேஸ்வரி, நகுலேஸ்வரி, சொர்ணாம்பிகை, கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயன், செல்வராஜ், சுரேஸ், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சாந்தி மற்றும் ரமணி, ஜெயந்தி, ஜானகி, இந்திரகுமார், ரமேஸ் தினேஷ், விஜயா, சர்வேஸ், பவித்திரா ஆகியோரின் அன்பு அத்தையும் கார்த்திகா, தரங்கினி, சுரபூஜிதா, மதிஷன், யதிசன், அபிலாஷ், பிரியங்கா, கீர்த்தனா, நதிஷனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30 பலாலி வீதி,
2ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 844 5309, 077 968 8105
077 563 2642, 077 837 4994

(CS 2255) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## உயிர்மாய்ப்பு என்பது சமூகப் பேரழிவே!

*2024 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 180 க்கும்* மேற்பட்டவர்கள் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளனர் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழர் பகுதிகளில் அண்மைக்காலமாகத் உயிர்மாய்ப்புகள் பொதுவான விடயமாக மாறியுள்ள நிலையில், இந்தப் புள்ளி விவரம் பல்வேறு அபாய எச்சரிக்கைகளை எழுப்பியுள்ளது. ஒரு லட்சம் பேருக்கு 15 பேர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்கின்றனர் என்பது தேசியப் புள்ளிவிவரமாக இருக்கையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. ஆனால், இவ்வாறான தகவல்களுக்கு நாம் போதிய அளவு முக்கியத்துவம் வழங்குகின்றோமா என்று கேட்டால் இல்லை என்பதே பதில்.

ஆகப்பெரும் அபத்தம் என்னவென்றால், இலங்கையில் உயிரைமாய்ப்போரில் அதிகளவானவர்கள் சிறுவர்களும் இளைஞர்களும் யுவதிகளுமே. பரீட்சைகளால் ஏற்படும் அழுத்தம், மனப்பிறழ்வு, போதைப்பொருள் கலாசாரம், காதல் தோல்வி என இதற்கு எண்ணற்ற காரணங்கள் அடுக்கப்பட்டாலும் அந்தக் காரணங்கள் ஒன்றும் களையப்படக் கூடியவை அல்ல. ஆனால், இன்றெல்லாம்,உயிர் மாய்ப்பு என்பது தனி நபர்களின் மனநலப் பிரச்சினையாக சுருக்கிப் பார்க்கப்படுகிறது. மாறாக அது தீவிரமான சமூக, பண்பாட்டுப் பிரச்சினை. பிறரின் தலையீட்டினால் பெரும்பாலான உயிர்மாய்ப்புகளைத் தடுத்து விட முடியும் என்பதே உண்மையும் யதார்த்தமும். ஆதலால், தவறான முடிவெடுக்கும் நிலையிலுள்ள நபரொருவர், இலகுவில் அணுகக்கூடியவர்களாக எம்மை நாம் வைத்திருக்கின்றோமா? என்ற சுயபரிசீலனை இப்போது அவசியமாகவுள்ளது.

எந்தவொரு உயிரியும் தன் மூதாதையரிடம் இருந்துதான் தன்னைத் தற்காத்துக்கொள்ள கற்றுக்கொள்ளும். குடும்பத்தினரும் மூதாதையரின் அரவணைப்பும் அன்பும் அக்கறையும்தான் இளைய சமூகத்தினர் நேரிய சீரிய பாதையில் பயணிக்க வழிசமைக்கும். ஆனால், இன்றைய சமூகமோ இணையத்துக்குள் அடைபட்டுவிட்டது. மீண்டெழ முடியாதவாறும் திரும்பிச்செல்ல முடியாதவாறும் அந்தக் கதவுகள் இறுக்கமாகப் பூட்டப்பட்டிருக்கின் றன. இதுவே இன்று அநேகமான தற்கொலைகளுக்குப் பிரதான காரணமுமாகும். இவ்வாறானதொரு பின்னணியில், தற்கொலைகளைத் தடுப்பதற்கு 'பாரம்பரிய அணுகுமுறைகள்' இன்று போதாது என்ற புரிதலை துறைசார் அதிகாரிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இது இருபத்தோராம் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டுக்குரிய அணுகுமுறைகளுக்கு நாம் மாறவேண்டியது அவரசமும் அவசியமுமாகும்.


உயிரை மாய்த்தலுக்கு பல காரணிகள் காணப்பட்டுகின்ற போதிலும், அவற்றையெல்லாம் தாண்டி பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பலர் வாழ்ந்திருக்கின்றனர் - வென்றிருக்கின்றனர். இவர்கள் தங்கள் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தி, உறுதியான உள்ளம் கொண்டவர்களாக வாழ்கின்றனர். அவர்களிடம் இருந்து நாம் வாழ்க்கையை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், உயிர்மாய்ப்புகள் தோற் கடிக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல: துடைத்தெறியப்பட வேண்டியவையும் கூட.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

அறிவு என்பது நதியைப் போன்றது. அது எவ்வளவு ஆழமாக இருக்கின்றதோ அந்தளவுக்கு அமைதியாக இருக்கும்.

– பெர்னாட் ஷா–



பொருளாதார நெருக்கடியால் -

## உணவுத்தேவைக்கு நகைகள் அடமானம்

**கொழும்பு, ஜன.11**

**இலங்கையில் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக கடன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு தங்க ஆபரணங்களும் அடகு வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

'உணவு அடிப்படையிலான தகவல் மற்றும் செயல் வலையமைப்பு' நாட்டின் 10 மாவட்டங்களில் நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

ஆய்வில், 32 சதவீத குடும்ப அலகுகள் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய கடன் வாங்குகின்றன. 31.7 சதவீதம் பேர் உணவுக்காக தங்க ஆபரணங்களை அடகு வைத்தும் சொத்துகளை விற்றும் கடனுக்குப் பணம் வாங்குதல் போன்றவற்றின் மூலம் உணவுத் தேவையை பூர்த்திசெய்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, பதுளை, இரத்தினபுரி, காலி, நுவரெலியா, கொழும்பு, அநுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர்

கொழும்பு, ஜன.11

இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்கஸ்ரீநாத் அபேவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## புலமைப்பரிசில் பெறுபேறு பெப்ரவரிக்குள்

கொழும்பு, ஜன. 11

2024 ஆம் ஆண்டுக்கான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கும் 12 ஆம் திகதிக்கும் இடையில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ச-இ)



## கட்டுநாயக்கவுக்குள் பஸ்கள் மீள அனுமதி

கொழும்பு, ஜன. 11

உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் பாதுகாப்புப் பிரிவின் வேண்டுகோளுக்கு அமைய சொகுசு பஸ்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விமானப் பயணிகளின் வசதிக்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ரஷ்யச் சுற்றுலாவி நீரில் மூழ்கிச் சாவு

மட்டக்களப்பு, ஜன.11

மட்டக்களப்பு - பாசிக்குடாக் கடலில் தனது மனைவியுடன் நீராடிய ரஷ்ய நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. (ச-இ)



## 1000 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு, ஜன.11

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாக 800 முதல் 1000 வரையான கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாகக் கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்படும் தாமதங்களுக்கு துறைமுக அதிகாரசபை மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் நிர்வாகப் பலவீனங்களே காரணமாகும் என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை - மார்கழி - 28

12.01.2025

சுபநேரம் : 09.33 - 11.03

ராகுகாலம் : 05.33 - 06.33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக நெற்செய்கைக்கு உரமானியமும் இலவச உரமும்!

## பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 11

இம்முறை பெரும்போகத்துக்கென உரமானியமாக 25 ஆயிரம் ரூபாவும் இலவசமாகப் பொட்டாசியம் உரமும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மாவட்டத்துக்குமென உரமானியத்தை வழங்குவதற்கான கால எல்லை ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து 2025 பெப்ரவரி முதலாம் திகதி வரையாகும். 25 ஆயிரம் ரூபா உரமானியம், 15 ஆயிரம் ரூபா மற்றும் 10 ஆயிரம் ரூபா என்ற தவணை அடிப்படையில் இரு கட்டங்களாகப் பிரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் விவசாயிகளுக்கென வழங்கப்படும் நிதி நிவாரணத்துக்கு மேலதிகமாக பொட்டாசியம் உரத்தை இலவசமாக வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது - என்றார். (ச-22,26)

# 'தூயஇலங்கை' திட்டம் யாழில் தெளிவூட்டல்

யாழ்ப்பாணம் , ஜன. 11

'தூய இலங்கை' திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலர் திருமதி சாரதாஞ்சலி மனோகரன் கலந்துகொண்டு 'தூய இலங்கை ' வேலைத் திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்களை வழங்கியதுடன், அரச அலுவலர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார். (ச-22,125)



# சுண்ணக்கற்கள் அகழ்வு; யாழ். குடாநாட்டுக்கு ஆபத்து

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும், கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணக்கற்கள் அகழ்வானது காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும். ஆகவே இந்தச் செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்திலிருந்து சுண்ணக் கற்கள் அகழ்ந்து வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

சுண்ணக்கற்கள் அகழ்வு பயிர்ச்செய்கைக்காக இரண்டடி ஆழம் வரையில் கிளறி எடுத்தல் எனும் நிலையிலிருந்து தற்போது சிமெந்துத்தயாரிப்புக்காகக் கனரக வாகனங்களைக் கொண்டு அகழ்ந்தெடுத்தல் என்ற நிலைக்கு மாறியுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து சுண்ணாம்புக்கல் வெளிமாவட்டங்களுக்குத் தங்குத் தடையில்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது. இனிமேலும் அகழ்வைத் தொடர்ந்தால் சூழல் ரீதியாகப் பல்வேறு பாதிப்புகளை யாழ். குடாநாடு எதிர்கொள்ள நேரிடும் -என்றார். (ச-25, 27, 125-20)

# கேப்பாப்பிலவுப் பகுதிகளில் யானைகள் அட்டகாசம்!

முல்லைத்தீவு. ஜன. 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு மற்றும் பிலக்குடியிருப்புப் பகுதிகளில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நெல் அறுவடை நெருங்கும் நிலையில் கடந்த புதன் கிழமை இரவு கேப்பாப்பிலவுப் பகுதிக்குள் நுழைந்த காட்டுயானைகள் அருகிலுள்ள வயல்வெளிகளை நாசம் செய்ததுடன் கேப்பாப்பிலவு விமானப்படையினரின் வேலியையும் உடைத்தெறிந்துவிட்டுச் சென்றுள்ளன.

எனவே, காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-22,1)



# கழிவுநீரில் கழுவி மரக்கறிகள் விற்பனை

## வவுனியாவில் நுகர்வோர் விசனம்

வவுனியா, ஜன. 11

வவுனியா, இலுப்பையடிப் பகுதியிலுள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு வரப்படும் மரக்கறிகளை, வியாபாரிகள் கழிவுகள் நிறைந்த வவுனியாக் குளத்து நீரில் கழுவி விற்பனைக்கு எடுத்துவருவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில மாதங்களுக்கு முன் இதுகுறித்து சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது சம்பவ இடத்துக்கு வருகைதந்த பரிசோதகர்கள் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.


எனினும் தற்போதும் சில வியாபாரிகள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தச் சுகாதாரச் சீர்கேடான மரக்கறிகளை வாங்குவதால் நோய்த்தொற்றுக்கு ஆளாகநேரிடும்.

எனவே, இதுதொடர்பில் நகரசபை அதிகாரிகள் கவனம் செலுத்தி அவ்வாறான வியாபாரிகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-25, 18)

# பொங்கலையொட்டி சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன.11

வருடாந்த பொங்கல் விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையம் மற்றும் டயானா விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி நடத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வு அளவெட்டி முற்போக்கு முன்பள்ளி முன்றலில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். (ச-25, 63)



# பொன்னாலை வரதராஜருக்குத் தேர்

வரலாற்றுத் தொன்மைவாய்ந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தின மஹோற்சவத்தின் தேர்த்திருவிழாவானது வைகுண்ட ஏகாதசி நன்நாளான நேற்று வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. (ச-66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை நகரசபை
## மரக்கறிச் சந்தை இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

நவீன சந்தைக் கடைத்தொகுதியின் மேல்மாடியில் இயங்கிவந்த மரக்கறிச் சந்தையானது பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் நன்மை கருதி, எதிர்வரும் 16.01.2025 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் முதலாம் குறுக்குத்தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தில் இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.


தற்போது இயங்கிவரும் பழைய சந்தையில், தற்போது வரை விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வியாபாரிகள் அனைவரும், புதிய சந்தைக் கட்டடத்திற்காக முன்னுரிமை அடிப்படையில் தங்களுக்கு வழங்கப்பட்ட/ தங்களால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட விற்பனை மேடைகளில் விற்பனை நடவடிக்கைகளை 16.01.2025 ஆம் திகதி முதல் ஆரம்பித்து, பொதுமக்களுக்கும் சபைக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி தாரணி கஜரூபன்
செயலாளர்
பருத்தித்துறை நகரசபை

11.01.2025

## மரண அறிவித்தல்

### அமரர் குமரேசு யோகலிங்கம்



தோற்றம்
28 . 12 . 1951

மறைவு
10 . 01 . 2025

**அமரர் குமரேசு யோகலிங்கம்**
(ஓய்வு பெற்ற சிரேஸ்ட சாலைப் பரிசோதகர்- கிளிநொச்சி சாலை, மன்னார் சாலை, தலைவர், கமக்கார அமைப்பு, கணேசபுரம்)

கைதடியைப் பிறப்பிடமாகவும் கணேசபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் குமரேசு யோகலிங்கம் அவர்கள் நேற்று (10.01.2025) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு-சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை-லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும் விசுவலிங்கம், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் தவமணி ஆகியோரின் சகோதரனும் வாசுதன் (ஜேர்மனி), விஜிந்தன் (இ.போ.ச. மன்னார் சாலை), விஜிதரன் (இ.போ.ச. யாழ். சாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் யூலி நிவேதா (ஜேர்மனி), வினோபா (வடக்கு மாகாண சபை), சுகனியா ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுசாந், டக்ஷினா, அருணிசா, அக்ஷரா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


077 882 0908
077 816 4778
0049 1764 1197 110

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2251) P-1

## மரண அறிவித்தல்

### நல்லைநாதன் நவமணி



சங்கானை சேர்ச், வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நல்லைநாதன் நவமணி நேற்று முன்தினம் (09.01.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகதாசன், அருந்தவசெல்வி ஆகியோரின் தாயும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்


பிறப்பு 09.12.1938
இறப்பு 09.01.2025

தகவல்:
குடும்பத்தினர்

(CS 2253) P-1

## மரண அறிவித்தல்

### கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)



தோற்றம்
14 . 06 . 1964

மறைவு
10 . 01 . 2025

**கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)**
(வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், கலட்டி கற்பக விநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், உரிமையாளர் SKAT கேபிள் விசன் கட்டப்பிராய் , வரதன் எலெக்ரோனிக், சரண்யா கொமினிக்கேசன்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 66 சீனியர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்) நேற்று (10.01.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-கண்ணம்மா தம்பதியின் அன்பு மகனும், நவரத்தினம்-மனோன்மணி தம்பதியின் மருமகனும் கலாராணியின் பாசமிகு கணவரும், சுகிர்தா (சிரேஸ்ட விரிவுரையாளர் தொழிநுட்பப்பீடம் யாழ் பல்கலைக்கழகம்), சரண்யா (Trendy Jaffna, துளசிகா (BOC Jaffna), அபிநந்தன் (4ம் வருட முகாமைத்துவபீடம் யா.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜராஜ், ரமேஸ்குமார், லிங்கராஜ் (BOC) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்ஷா பிரஜித், பிரகதி ஆகியோரின் பேரனும், புஸ்பமாலா, ஸ்ரீஸ்காந்தன் (பத்திரிகை முகவர் புங்குடுதீவு), இரஞ்சிதமாலா, சிறிதரன் (பொலிவியா), காலஞ்சென்ற ஜீவமாலா மற்றும் சிறிபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் அன்புச்சகோதரனும் இரத்தினவேல் (அத்தான்), வசந்தா, தர்மசேனன் (பெயின்ரர்), விஜயலலிதா, காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் அருளானந்தம், கிருபானந்தன், திருவேணி, மனிமேகலா, சுமதி, அகிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் (கைலை வாசம்) பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கைலை வாசம்
இல 66, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
[illegible]

(...57174) V-1

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி குகதாஸ்



தோற்றம்
06 . 12 . 1942

மறைவு
07 . 01 . 2025

**திருமதி பரமேஸ்வரி குகதாஸ்**

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி குகதாஸ் 07-01-2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்ற சிவஞானம்-மாணிக்கசுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் பிரதீபாவின் அன்புத் தாயாரும் ரவிக்குமார் அவர்களின் அருமை மாமியாரும் சாயித்தனின் ஆருயிர் அம்மம்மாவும் காலம்சென்றவர்களான மகேஸ்வரி பாலசரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 10.00 மணிக்கு இல 180, பிரதான வீதி ,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள White House மலர்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிரதீபா ரவிக்குமார் (மகள்)
00447868950274 (லண்டன்)
0752658515 (இலங்கை)

(CS 2249) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
02 • 11 • 1941



மறைவு
14 • 12 • 2024

கடந்த 14.12.2024 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் வல்லிபுரம் தம்பையா

(ஓய்வுநிலை வங்கி உத்தியோகத்தர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளைமறுதினம் 13.01.2025 திங்கட் கிழமை காலை 6.00 மணியளவில் புற்றளைப் பிள்ளையார் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். மேற்படி நிகழ்வுகளில் தவறாது பங்கேற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம். துண்டுப் பிரசுரம். பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பலவேறு வழிகளிலும் உதவிய அயலவர். உற்றார். உறவினர். நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு: தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்..**

**கந்தஉடையார் ஒழுங்கை,**
**புலோலி மத்தி, பருத்தித்துறை.** (CR/44064) J-1 **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 • 08 • 1934



மறைவு
06 • 01 • 2025

## வாரித்தம்பி செல்லம்மா

கிளிநொச்சி அல்லிப்பளை பளையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட வாரித்தம்பி செல்லம்மா கடந்த 06.01.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வாரித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், ராசம்மா (பூரணம்), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, செல்லத்துரை (V.M.T), கனகரத்தினம் மற்றும் தர்மலிங்கம் (கனடா), தியாகராசா (கிளி), இராசேந்திரம் (ராசா), வேலாயுதபிள்ளை (சிவம் - கொழும்பு), சுந்தரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, செல்வரத்தினம் மற்றும் ஆனந்தலட்சுமி (கனடா), சரஸ்வதி, சரோஜாதேவி (கனடா), தவமணி, முத்துலட்சுமி, புனிதமலர், சரோஜாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஸ்ணபிள்ளை (அழகு), காலஞ்சென்ற கணேசலிங்கம் (குணம்), மகேந்திரம் (நவம்), யோகேஸ்வரி (யோகம் - லண்டன்), லிங்கநாதன் (லிங்கம் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, ஈஸ்வரநாயகி, தேவராணி (கனடா), குகதாஸ் (குகன் - லண்டன்), பிறேமசுஜா (சுஜா - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கோமதி, சிவரூபன், காலஞ்சென்ற ரேகா, ஜெசிந்தன், நிரோஜன், டிசாந்தன், சஜீரன், தனேசாந், பிரதாப், ரகிதாப், நிரோஜா, சரணிகா, அஸ்வின், அதிசயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும் **அதே நாள் புலோப்பளையில் அமைந்துள்ள மகனின் (நவம்) இல்லத்தில் நினைவு அஞ்சலி நடைபெறும்.** இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**நவம் - 077 387 3066**
**சிறி - 077 717 7305**

(Cr/44062) N-1

# 19ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 24.06.1946 உதிர்வு 12.01.2006

## அமரர் சின்னத்தம்பி நடராசா

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

எங்கள் ஆருயிர் அப்பாவே
பத்தொன்பது ஆண்டுகள் ஓடோடிச்
- சென்றதுவே அப்பா....
உங்கள் பேரக்குஞ்சுகள் உங்களைத்
- தேடுகின்றார்கள் அப்பா....
உங்கள் புன் சிரிப்பைத் தேடுகின்றோம் அப்பா ....
எம்மைக்கான ஒருமுறை வரமாட்டீங்களே அப்பா...

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.** (cr 544081) (N-1) **குடும்பத்தினர்**

# உங்கள் பாதக்கமலமதில் எங்கள் 22ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்



அன்னை மடியில் 16.07.1943 ஆண்டவன் மடியில் 11.01.2003

## அமரர் சபாபதி நாராயணன்

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், சமாதான நீதவான்)

அப்பா உன் குரல் கேட்டு
ஆண்டுகள் பல ஓடிப்போச்சு

(cr 57159) (N-1)

**பிள்ளையார் கோயிலடி, வடலியடைப்பு.**

**என்றும் நினைவில் மனைவி, பிள்ளைகள்**

# அறுவடை விழா

யாழ்., ஜன. 11

மறவன்புலவு கமக்கார அமைப்பின் காலபோக நெற்செய்கை அறு வடை விழா மறவன் புலவு சகலக லாவல்லி வித்தியாலயத் தில் நாளைம றுதினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற வுள்ளது. நிகழ்வில் விருந்தினர்க ளாக வடமா காண ஆளுநர் நா.வேதநாய கன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட் டச் செயலர் ம.பிரதீபன் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ள னர்.

(ச-25,9)

# கலைவிழா

மட்டுவில் வடக்கு கண் ணகை முன் பள்ளி சிறார்க ளின் கலை விழா முன் பள்ளி மண்ட பத்தில் இன்று மு.ப.9.30 மணிக்கு நடை பெறவுள்ளது. நா.கஜேந்தி ரன் தலைமையில் நடை பெற வுள்ள நிகழ் வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை மாவட்ட நிர்வாக உத்தியோ கத்தர் திருமதி இளமதி சபாலிங்கம் கலந்துகொள் வார்.

(ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை கலைமகளின் புதிய நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 11

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 79ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு '80 ஆவது ஆண்டுத் தொடக்கத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளிலான வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் மருத்துவர் செல்வ துஷ்யந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. தலைவராக ம.நவநீதன், உப தலைவராக சி.சத்தியகுமார், செயலாளராக திருமதி மாதுரி சிவதர்சன், உப செயலாளராக கு.உதயசீலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

விளையாட்டுக்குழுத் தலைவராக ம.அச்சுதன், அங்கத்தவர்களாக சி.தர்சன், வி.கிருஷிகேசன், கு.நிருக்சன் மாதர் சங்கத்தின் தலைவியாக திருமதி ஜதர்சன் ஜெயரஜிந்தா, சங்க அங்கத்தர்வ்களாக திருமதி சாந்தினி திருச்செல்வம், திருமதி விஜயா குமரதாசன், இளைஞர் கலாமன்றத்தின் தலைவராக கு.அன்ரன், மன்ற அங்கத்தரவர்களாக கு.சாருஸன், ச.கலைநயன், சிறுவர் அரங்கத்தின் தலைவராக பா.இசைப்பிரியன் அரங்க அங்கத்தவராக க.கஜானன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். கலைக்குழுப் பொறுப்பாளர்களாக வீ.பிரசன்னா, க.கௌரிதாசன், கணக்குப் பரிசோதகராக இ.பாரதிதாசன், நிலையப் பொறுப்பாளராக சி.ஜெயக்குமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். போசகர்களாக மருத்துவர் செல்வதுஷ்யந்தன், நா.திருச்செல்வம், கிராம அலுவலர் ஆகியோர் பணியாற்றுவர். (ச-25)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 05 . 1951



மறைவு 09 . 01 . 2025

### பொன்னுத்துரை சிவபாக்கியம்

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவபாக்கியம் அவர்கள் நேற்று முன்தினம் (09.01.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-கோவிந்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும் வக்சலா, கிரிஷாந்தன், கைலவாசன் (நோர்வே), வனஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ரகுபரன், சுகந்தினி, செந்தூரி (நோர்வே), பிரதீஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற பாக்கியநாதன், மகேஸ்வரி, சிவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்புப் பேரக்குழந்தைகளின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்.
077 858 4611

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 05 - 1946



மறைவு 05 - 01 - 2025

### திருமதி பாலசிங்கம் கமலாவதி

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் கமலாவதி கடந்த 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் உடுவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - லீலாவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சியாமளன் மற்றும் இராகுலன் (கனடா), அஜந்தா, தயாளன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் -

காலஞ்சென்றவர்களான அரியம்மா, மகேஸ்வரி, மற்றும் மகேந்திரா (சுவிஸ்), காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் தெய்வேந்திரா (டென்மார்க்), யோகேஸ்வரி (டென்மார்க்), காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் புஸ்பவதி (கொழும்பு), காலஞ்சென்ற ராஜேந்திரா மற்றும் புவனேந்திரா (டென்மார்க்), காலஞ்சென்ற கஜேந்திரா மற்றும் சரஸ்வதி (கனடா), திலகவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும் -

ராஜேந்திரா, மதுரா(கனடா), சுகன்ஜா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிஷ்ராகவ், வஸ்மிகா(கனடா), ஹரிஷ் ஆதவ், கிரிஸ்னிக்கா(கனடா), ஆர்த்திகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.01.2025 ) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு.

தகவல்:
பிள்ளைகள்
(இராகுலன், அஜந்தா, தயாளன்)

## மரண அறிவித்தல்



### கந்தையா சண்முகதாசன்

(தர்மகர்த்தா, சங்கானை ஸ்ரீமுருகமூர்த்தி தேவஸ்தானம், உரிமையாளர் - ஆனந்தா அச்சகம்)

சங்கானை தேவாலயவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகதாசன் அவர்கள் நேற்றுமுன்தினம் (09.01.2025) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஜெயலட்சுமியம்மா தம்பதியரின் அன்பு மகனும், சோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தவமலரின் அன்புச் சகோதரனும், நிஷ்கலா (CEO Advent Projects (PVT)Ltd), சேந்தன் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், துவாரகன் (Director, Advert Exalt Pvt Ltd), லக்ஸ்மீரா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், ஜெய்ஸ்ணவ, லக்ஷிதா, நயணிகா, திபிக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், ரஞ்சனி, ரஞ்சன், சுகுமார், சுரேஸ்குமார் ஆகியோரின் தாய்மாமனும், உமாதேவி, மகேந்திரன், காலஞ்சென்றவர்களான செல்வராணி, வரதராஜா, லக்ஷ்மிகாந்தன் மற்றும் செல்வராஜேஸ், சந்திரகாந்தன், யசோதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 30.07.1946

இறப்பு 09.01.2025

தகவல் :
குடும்பத்தினர்
077 742 1732, 077 916 2670,
077 527 9875

(CS/57172) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்




BMICH இல் 08.01.2024
புதன்கிழமை விஞ்ஞான மாணி
(B.Sc) பட்டத்தினைப் பெற்றுக்
கொண்ட எமது வித்தியாலய
ஆசிரியர்

**திருமதி சுசிதா விஜயேந்திரன்**

அவர்களை வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்களைப் பெற்று
சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கச்சாய் மகா வித்தியாலயம்

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் மாணிக்கம் இராசா

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு. இராசா நகுலேஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தை **மாணிக்கம் இராசா** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம், உரும்பிராய். ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலத்திற்குட்பட்ட வட்டாரம் - 03. சிவன்வீதி 1ஆம் ஒழுங்கையில். ஆதன இலக்கம் 44 இல் அமைந்துள்ள ஆதனத்தினை கந்தசாமி சந்திரகுமார் பெண் ஜெயந்தினி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

குறித்த ஆதனமானது வடமாகாணம். யாழ்மாவட்டம். பிரதேச செயலர் பிரிவு கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராய் இறை கிராம அலுவலர்பிரிவு J/ 266 இல் "கீழ்ப்பை" இதன் உறுதி இலக்கம் 765 ஆனது பிரசித்த நொத்தாரிசு கா.மு.இராதாக்கிருஷ்ணன் என்பவரினால் 2011.11.11 ஆம் திகதி எழுதப்பட்டது இவ் உறுதி நன்கொடை உறுதியாக காணப்படுகின்றது. உறுதியில் நிலப்பரப்பு 01 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் S.K.Sivananthen அவர்களின் 2024.08.08 ஆம் திகதிய 6258ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது இது உரும்பிராயைச் சேர்ந்த பொன்னன் அழகரத்தினம் என்பவரினால் அவரது மகளான கந்தசாமி சந்திரகுமார் பெண் ஜெயந்தினிக்கு வந்தடைந்துள்ளது. இதன் எல்லைகளாக கிழக்கு தம்பு தேவராசாவின் ஆதனம் வடக்கு உத்தேசம் 6 அடி அகலம் கொண்ட பாதை நிலம். மேற்கு உத்தேசம் 12 அடி அகலம் கொண்ட பாதை நிலம். தெற்கு உத்தேசம் 12 அடி அகலம் கொண்ட பாதை நிலமும் இதடாங்கலும்.

764 ஆம் இலக்க 19.11.2011ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு கா.மு.இராதாக்கிருஷ்ணன் என்பவரினால் எழுதப்பட்ட உருத்துவிளம்பல் தாய் உறுதியில் கீழப்பை நிலப்பரப்பு 01 இவ் ஆதனத்தை அவரது தந்தையாரான கந்தன் பொன்னனும் தாயாரான சின்னம்மா ஆகிய இருவரும் இவ்வாதனத்தை 1965 ம் ஆண்டு வரையில் கொள்வனவு செய்து குடும்பமாக குடியிருந்து ஆட்சி செய்து வந்ததாகவும் 1970ம் ஆண்டு வரையில் தமக்கு இவ் ஆதனத்தை நன்கொடையாக தந்ததாகவும் அன்றில் இருந்து இவ்வாதனத்தை அபிவிருத்தி செய்து தோட்டம் செய்தும் செய்பயிர்கள் உண்டாக்கியும் இற்றை வரை ஆட்சிசெய்து வருவதாகவும் இவ்வாதனத்தின் ஆட்சி சுமார் 47 ஆண்டுகளுக்கு மேலாக தனது தந்தை தாயாராலும் தன்னாலும் தொடர்ந்து இடையுறாது ஆட்சி செய்யப்பட்டு வருகிறது எனவும் இவ் ஆதனத்தை எதுவித தடையுமின்றி எவரது தலையீடோ குழப்பமோ இன்றியும் இன்னும் எவரிற்கேனும் வாடகையோ பயன்களோ செலுத்தாமலும் எவரின் உரித்தையும் அங்கீகரிக்காது எதிர் உருத்தாகவும் உடமை கொண்டு ஆட்சி செய்து வருவதாகவும் ஆட்சி உரிமை சட்டப்படி இவ் ஆதனம் தமக்கே உரியதெனவும் இவ்வாதனம் சம்பந்தமான தஸ்தாவேதுகள் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாகவும் இடப்பெயர்வு காரணமாகவும் அழிந்தும் தொலைந்தும் விட்டது என உருத்துவிளம்பல் செய்யப்பட்டுள்ளது இதற்கு முற்பட்ட உறுதிகள் எதுவும் காணப்படவில்லை

எனவே இவ்வாதனத்தினை கந்தசாமி சந்திரகுமார் பெண் ஜெயந்தினி என்ற பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் தருந்த சட்டரீதியான ஆவணங்களுடன் 2025.01.25 ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி சந்திரகுமார் பெண் ஜெயந்தினி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் விநயமுடன் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்.**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** 11.01.2025

## பொதுச்...

அத்துடன், கொழும்பார்களின் கூக்குரலுக்கு நான் பயந்தவன் அல்லன். என்னை நீக்கும் அதிகாரம் பொதுச்சபைக்கே உள்ளது என்றும் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியின் யாப்பே அதன் முதுகெலும்பு. திருகோணமலையில் கட்சிமீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் எமது பொதுச்சபையானது முடக்கப்பட்டுள்ளது. அப்போது இனிமேல் யாப்புமீறல் செய்யமாட்டோம் என்று பேசப்பட்டது. ஆனால் மீண்டும் அதே யாப்பு மீறலை மத்தியகுழு செய்கின்றது என்றால் இதன் நோக்கம் என்ன? பொதுக்குழுவுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகளை நடத்தியவர்கள் யார்? என்பது வெளிப்படுத்தப்படவேண்டியவிடயம். மத்தியகுழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மாற்றக் கூடாது.

கடந்த ஒரு மத்தியகுழுக் கூட்டத்தில், மாவை சேனாதிராஜாவைப் பார்த்து, 'கதிரையில் இருக்கவேண்டாம் உங்கள் இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது' என்று சொன்ன நபர் மத்தியகுழு விலேயே இல்லாத ஒருவர். மத்திய குழு வில் இல்லாத ஒருவர் உள்ளே எடுக்கப்பட்டு அவரால் தலைவர் மாவை மீது சேறு பூசப்பட்டது. இறுதிக் கூட்டத்துக்கு முன்பாக, நிகழ்ச்சி நிரலை தன்னிடம் ஒப்படைக் குமாறு தலைவர் மாவை சேனாதிராஜா கடிதம் அனுப்பினார். ஆனால் அதற்கு முந்தைய திகதியைப் போட்டு பதில் செயலாளர் நிகழ்ச்சி நிரலை அனுப்பியுள்ளார். நிலைமை அவ்வாறே உள்ளது.

பதில் செயலாளர் என்ற போர்வையில் ஒருவர் இருந்துகொண்டு யாப்பை மீறிச் செயற்பட்டமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்குத் துணிவு இருந்தால் வழக்குகளை மீளப்பெற்று பொதுச்சபையைக் கூட்டுமாறு சவால் விடுக்கின்றேன். பொதுச்சபை கூட்டப்பட்டால் மட்டுமே மாபியாக்களிடம் இருந்து தமிழரசுக்கட்சியை மீட்கமுடியும்.

தேசியப்பட்டியல் என்பது சமுதாயத்தில் கௌரவமான ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏறி மிதிச்சாலும் தலையை தூக்கத் தெரியாத நாக்கிளிப் பாம்புகள், காணி பிடிக்கின்ற மாபியாக்கள், ஜனநாயக மறுப்பைச் செய்யும் சுயநலவாதிகள் இவர்களே தேசியப்பட்டியலில் வந்தவர்கள். இவர்களால் கட்சியை வளர்க்க முடியுமா? - என்றார். (அ-ம-26-18-110)


## வீடு தேவை

3 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு
இருபாலை/ கல்வியங்காடு/
கோண்டாவில் பகுதியில் வீடு தேவை.
தொடர்புகளுக்கு: (CS 57175) P-1
077 417 9748


# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 01.09.1978
மறைவு 12.12.2024

கடந்த 12.12.2024 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**றொபின் அன்பரசி**

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்)
அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு
இன்று (11.01.2025) சனிக்கிழமை
பருத்தித்துறை வீதி கல்வியங்காட்டில்
அமைந்துள்ள திவ்ய ஜீவன சாங்க
மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம்
தாங்கள் குடும்ப சகிதம் மதியபோசன நிகழ்வில்
கலந்துகொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் (cs.2214) (N-1)


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் கோவில் வீதி - அம்மன் வீதியில் புத்தம் புதிய வீடு
1 1/2 பரப்பும் 1 1/2 குளியும் விற்பனைக்குண்டு.

- 3 அறைகள் - 2 இணைந்த குளியலறையுடன் 1 Open குளியலறை வசதி
- சுற்று மதில்
- முழுமையாக மாபிள் பதிக்கப்பட்டுள்ளது
- 2 கார்கள் நிறுத்தக் கூடிய இடவசதி

(cs.57119) (N-1)
077 271 8249 / 075 670 1631

## வகுப்புக்கள்

- **கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் குறைந்த புள்ளிகளை பெறும் மாணவர் களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள்.**
- **கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சவால்களை எதிர்கொள்ளும் இம்முறை O/L பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான விஷேட வகுப்புக்கள்.**

CS/57170) J-1
076 205 5169, 076 290 9644


## வலயக்கல்விப்...

இதன்படி, துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர், திருமதி மாலதி முகுந்தன் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராகவும், வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி யமுனா ராஜசீலன் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும், வலிகாமம் வலய (பதில்) வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன் வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும், (கல்வி அபிவிருத்தி), வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளராகவும், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) த.முகுந்தன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராகவும், இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (அ-ம-26)

# Jaffna College Alumni Association Annual General Meeting

The Annual General Meeting of the Jaffna College Alumni Association will be held on Saturday, the 25th of January 2025 at 9.30 a.m. in Ottley Hall, Jaffna College.

There will be a worship service at the JDCSI Cathedral at Vaddukoddai at 9 a.m. prior to the meeting.

All members are requested to attend the meeting.

Mrs. J. Paheerathan
Secretary, Jaffna College Alumni Association

11 January 2025

(CS/57168) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதவாச்சிப் பகுதியில்: பெண் சடலமாக மீட்பு

வவுனியா, ஜன. 11

அநுராதபுரம், மதவாச்சிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மயானம் ஒன்றுக்கு அருகிலுள்ள குழியில் இருந்து பெண்ணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் 30 தொடக்கம் 40 வயதுடையவர். அவரின் உடலில் காயங்கள் காணப்படுகின்றன. அந்தப் பெண் படுகொலை செய்யப்பட்டிருக்கச் சாத்தியங்கள் அதிகம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் பையில், அவர் கொழும்பில் இருந்து மதவாச்சிக்குப் பயணித்தமைக்கான இ.போ.ச. பேருந்துப் பயணச்சீட்டு மீட்கப்பட்டுள்ளது. சடலம் அநுராதபுரம் மருத்துவமனையில் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-110-18)

## சி.ஐ.டி.யினர்...

53 ஆயிரத்து 700 ரூபாவைக் கொள்ளையிட்டுள்ளனர்.

கோப்பாய் சந்தியை நோக்கிப் பயணித்த ஒருவரை கோப்பாய் பழனியாண்டவர் கோவில் பகுதியில் வைத்து சிலர் இடைமறித்துள்ளனர். இதன்போது, தம்மை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் என்று அடையாளப்படுத்திய அவர்கள், குறித்த நபரின் பொதியைச் சோதனையிடுவதாகத் தெரிவித்துவிட்டு அதில் இருந்த 53 ஆயிரத்து 700 ரூபாவைக் கொள்ளையிட்டுள்ளனர்.

அமைதியாகச் செல்லும்படியும், இல்லாவிடில் கஞ்சாக் குற்றத்துக்காக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர்கள் மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இதையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பால் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## சிறீதரன்...

என்று தெரிவித்த குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் நீண்ட நேரமாக அவரைத் தடுத்துவைத்து நேற்று விசாரித்துள்ளனர்.

தமிழகத்தில் இன்றும் நாளையும் அயலகத் தமிழர் விழா நடைபெறுகின்றது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த விழாவில் கலந்துகொள்வதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றபோதே, அங்கு அவர் தடுத்துவைக்கப்பட்டு நீண்டநேரம் விசாரிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பயணத்துக்கு அனுமதிக்க முடியாதென்ற அடிப்படையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் பயணிப்பதற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கடும் பிரயத்தனங்களை முன்னெடுத்ததன் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இந்தியாவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## இலங்கையின்...

இலங்கையிடம் இரக்கத்தையும், விருந்தோம்பலையும் ரொஹிங்யர்கள் எதிர்பார்க்கின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:-

நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த ரொஹிங்ய அகதிகளைக் காப்பாற்றி பாதுகாப்பாக தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கிய இலங்கையின் செயற்பாடு பாராட்டப்பட வேண்டியது. இதேவேளையில், இந்த இரக்கத்தையும் விருந்தோம்பலையும் ரொஹிங்யர்கள் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றனர்.

மியான்மரில் தொடர்ந்தும் வாழமுடியாது என்ற நிலையில்தான் ரொஹிங்யர்கள் அங்கிருந்து வெளியேறுகின்றனர். கடற் பயணத்துக்குப் பொருத்தமற்ற படகில் உயிரைப் பணயம்வைத்து அவர்கள் மேற்கொள்ளும் பயணம் மிகவும் ஆபத்தானது. அவ்வாறான நெருக்கடியானதும், அவலம் நிறைந்ததுமான நிலையில் வருவோரைப் பாதுகாப்பாகத் தரையிறங்க வைத்து, அவர்களின் உயிர்களைப் பாதுகாக்கின்ற உரிமைகளை உறுதிசெய்ய வேண்டியது எங்களின் முன்னுரிமைக்கான விடயங்களாகும் - என்றுள்ளது. (அ-ம-இ)

## விபத்தில்...

முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி, கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த யோகலிங்கம் குமரேசன் (வயது -74) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறைப் பகுதியில் இருந்து திருகோணமலைக்குப் பயணித்த பேருந்தும், மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் அந்த முதியவர் உயிரிழந்தார் என்று தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-113)

## அநுர...

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சிலர் ஊடகங்களுடன் முரண்பட்டுவருகின்றனர். குறிப்பாக ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்கள் தொடர்பில் பொருத்தமற்ற கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். சில சந்தர்ப்பங்களில் கருத்து வெளியிடுகையில், பத்திரிகைகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார்.

நாடாளுமன்றத்தில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பெயர்களைக்கூறி உரையாற்றுகின்றார். நான் கடந்த காலங்களில் ஊடகத்துறை அமைச்சில் பணியாற்றியவன் என்ற ரீதியில், தற்போதைய அரசாங்கம் ஊடகத்துறையைக் கையாளும் விதம் மிகவும் ஆபத்தானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அரசாங்கம் தற்போது பதற்றமடைந்து துலங்கலை வெளிக்காட்டும் நிலையை அடைந்திருக்கின்றது. வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்கள் மாறுபட்ட கருத்துகளை வெளியிடக்கூடும். இருப்பினும் நாம் அதனைப் பொறுமையுடன் கையாண்டு, அதற்கு அறிவார்ந்த ரீதியில் பதிலளிக்கவேண்டும். மாறாக ஊடகங்கள் தமக்கு ஏற்றவாறு அல்லது தமக்குச் சார்பாக செயற்படவில்லை என அரசாங்கம் பதற்றம் அடையக்கூடாது. எனவே பிரதமர், ஊடகத்துறை அமைச்சர் உள்ளிட்ட அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஊடகங்களைப் பெயர் குறிப்பிட்டுத் தாக்குவதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியின் பொருளாதாரத் திட்டங்களைத் தவறு என்று தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்தனர். தாம் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டுவருவதாகக் கூறியே அவர்கள் ஆட்சிப்பீடம் ஏறினார்கள். ஆனால், ரணிலின் பொருளாதாரக் கொள்கைகளையே தற்போதைய அரசாங்கத்தினரும் மாற்றமின்றிப் பின்பற்றுகின்றனர் - என்றார். (அ-ம-இ)

## ஈஸ்டர்...

உலகத்தில் உச்சப் பாதுகாப்புக் கட்டமைப்புக்கு அதிக நிதியைச் செலவு செய்கின்ற அமெரிக்காவில்கூட ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதேபோன்றுதான் இலங்கையிலும் உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் நடைபெற்றன. காத்தான்குடியைச் சேர்ந்த இளைஞர்களால் அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் கவரப்பட்டதாகவும், அல்லாவுக்காக மரணிப்பதாகவும் அவர்களே கூறியுள்ளனர்.

இவ்விாிருக்கையில், தற்போது ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம் தேவையற்ற விடயத்தில் என்னைத் தொடர்புபடுத்தி இந்த விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றது. குறிப்பாக ஜனாதிபதி அநுர கிறிஸ்தவ மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவும், கிறிஸ்தவர்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டும் செயற்பட்டு வருகின்றார்.

என்னோடு இருந்துவிட்டு, என்னிடமிருந்து பிரிந்து பிரிட்டனுக்குச் சென்ற அசாத் மௌலானா என்ற நபர் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெறுவதற்காக வழங்கிய வாக்குறுதிகளை மையமாக வைத்து என்னை விசாரிப்பது தவறான அணுகுமுறை - என்றார். (அ-ம-இ)

## தமிழாராய்ச்சிப்...

தூபியில் நேற்றுக்காலை இலங்கைத் தமிழரசுக் கட்சியினராலும், அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் தலைமையிலும் நினைவேந்தல்கள் இடம்பெற்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன், மலையகத் தியாகிகளுக்கான அஞ்சலி நிகழ்வுகளும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றன. (அ-ம-125)

## உதயங்க...

நபரைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று நண்பகல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம)


# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 18 அடிப்பாதையுடன் நன்னீரூற்று
- உரும்பிராய்ச்சந்தியிலிருந்து 500m தூரம்
- உரும்பிராய்ச்சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற் வீதியிலிருந்து 50m தூரம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 வரை மற்றும் பிற்பகல் 3.00 மணி முதல் பிற்பகல் 6.00 வரை. தொடர்புகளுக்கு:

குரு: 077 638 5683, 076 755 8606

(CS 2254) V-1

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி மெயின்றோட்டுடன் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 11/2, 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு, மேட்டுநிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேசசபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
- பரம்பரை ஆவணம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை. பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை

தொ: 077 468 3354

(CS2254) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
13 . 08 . 1938

மறைவு
13 . 12 . 2024

எமது குடும்பத் தலைவன்

அமரர் திரு. கதிரவேலு செல்வம்

(ஓய்வு பெற்ற நீதிமன்ற ஊழியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குமப்பிள்ளை,
கோப்பாய் தெற்கு.

(CS/29571) J-1

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 977 3335

# மரண அறிவித்தல்



மண்ணில்
01 . 07 . 1957

விண்ணில்
06 . 01 . 2025

**சுப்பிரமணியம் சிவகுமார்**

**(ஓய்வுபெற்ற சிறாப்பர் - மாநகரசபை யாழ்ப்பாணம்)**

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவகுமார் கடந்த 06.01.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதியரின் நான்காவது புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (சின்னத்தம்பி) - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், சோதிமலரின் (குஞ்சு) அன்புக் கணவரும், வினோத்குமாரின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், லக்ஷிகா (பிரான்ஸ்) இன் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அரசகுமார் (சுவிஸ்) மற்றும் பத்மகுமார் (கொழும்பு), காலஞ்சென்ற நந்தகுமார் (பிரான்ஸ்) மற்றும் சாந்தினி (கனடா), விசியகுமார் (டென்மார்க்), சந்திரகுமார் (நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற வரதராசா (சுவிஸ்) மற்றும் ருக்குமணிதேவி, குமுதினி, கமலினி (சுவிஸ்), காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் ராஜினி (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (கனடா), சாமினி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரதி (சுவிஸ்), இராஜசிவம் (சுவிஸ்), சண்முகதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற அப்பாத்துரை (கிராமசபைத் தலைவர்)-சொர்ணம்மா தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இராஜவீதி, நீர்வேலி வடக்கு. குடும்பத்தினர்.

(CS 57157) A-1


# மீனவர்கள் விவகாரம்; ஸ்டாலின் மீண்டும் கடிதம்

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்கு மீன்பிடித் தொழிலை மட்டுமே பெரிதும் நம்பியுள்ளனர். அவர்களை, இலங்கைக் கடற்படையினர் சிறைபிடிப்பதால், அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. உரிய இராஜதந்திர வழிமுறைகளை முன்னெடுத்து, அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)


## பதவி நிலை வெற்றிடம்

சாவகச்சேரியில் இயங்கிவரும் பிரபல வர்த்தகக் கம்பனிக்கு கீழ்வரும் பதவி நிலைகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

1. கணக்கீட்டு உதவியாளர் - ஆண் / பெண்
2. விற்பனைப் பிரதிநிதி - ஆண்
3. சாரதி AD ரகம்

தொடர்பு: 077 991 5465

(cs 57160)( N-1)

## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

- 19 - 45 வயதுடைய பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய தேகஆரோக்கியமுள்ள ஆண் வேலையாட்கள் வேலைக்குத் தேவை.
- ஆடு, மாடு மேய்த்தலில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- போதைப் பழக்க வழக்கம் அற்றவர்கள் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

இடம் :- கெற்பேலி மத்தி, மிருசுவில்

(CS/57166) J-1

076 200 1700

## நெல் அறுவடையாளர்களுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **நெல் சூடடிக்கும் இயந்திரம்** எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மணித்தியாலத்திற்கு 2 தொன் நெற்கதிர் அடிக்கக்கூடியதும் டிராக்டரில் பொருத்தி இயக்கக் கூடியதுமானது.

"நாங்கள் உங்களோடு"




**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



மண் மகிழ
07 . 11 . 1952

மனங்கள் நெகிழ
25 . 12 . 2023

கடந்த 25.12.2023 அன்று அமரத்துவம் அடைந்த
ஏமது அன்புத்தெய்வம்

**அமரர் வேலுப்பிள்ளை குமாரசாமி**

**(சந்திரன்)**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நாளை (12.01.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற உள்ளதால் தாங்களும் வருகைதந்து எம் அன்புத்தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)**

7 ஆம் வட்டாரம்,
சிவநகர்,
புதுக்குடியிருப்பு.

(cs.2245) (N-1)

குடும்பத்தினர்.
077 109 2169




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.